2026 ஆகஸ்ட் மாதம் 11– ஆம் தேதி செவ்வாய்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 32/2021

2026–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11– ஆம் தேதி செவ்வாய்கிழமை திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW18 (LW23) – முருகவேல் |
| தகப்பனார் பெயர்: | வாணித்துரை |
| ஊர்: | இராமநாதபுரம் |
| வட்டம்: | இராமநாதபுரம் |
| மாவட்டம்: | இராமநாதபுரம் |
| தொழில்: | வட்டாட்சியர், தமிழ்நாடு அரசு கேபிள் நிறுவனம், இராமநாதபுரம் |
| வயது : | 55 |

11.08.2026

(1, 2, 9 எதிரிகள் ஆஜர். 3 முதல் 8 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி இராமநாதபுரம் மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்திலிருந்து காணொளி மூலம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம், இராமநாதபுரம் மாவட்டம், தமிழ்நாடு அரசு கேபிள் நிறுவனத்தில் வட்டாட்சியராக பணியாற்றி வருகிறேன். நான் இராமநாதபுரம் வட்டாட்சியராக பணியாற்றியபோது, கடந்த 29.02.2020ம் தேதியன்று தேனி மாவட்டம், கடமலைக்குண்டு காவல் ஆய்வாளர் கொடுக்கலான தகவலின்பேரில்

நான் பணிபுரிந்த வட்டத்திற்குட்பட்ட காரான் கிராமத்தில் சேதுநகர் என்ற இடத்தில் அவர்களது காவல்நிலைய எல்கைக்குட்பட்ட காவல்நிலைய குற்ற எண்.50/2020 வழக்கு தொடர்பாக பிரேத பரிசோதனை செய்ய காலை 10.00 மணிக்கு கடிதம் கொடுத்தார்கள்.

2. சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம உதவியாளருக்கு நான் கொலை வழக்கு சம்பந்தப்பட்ட ஸ்பாட் பிரேத பரிசோதனை செய்யப்போவதாக தகவல் கொடுத்தேன். காலையில் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் உதவியாளர் ஆகியோர்களை காரான் கிராமம், சேதுநகர் பகுதிக்கு அனுப்பினேன், நான் மதியம் 1.00 மணியளவில் அந்த இடத்திற்கு சென்றேன். மதியம் 2.30 மணியிலிருந்து மருத்துவர் மற்றும் போலிஸ் பார்ட்டி வந்தார்கள். போலீசார் அழைத்து வந்த 7 வது எதிரி கிஷோர் அடையாளம் காட்டிய இடத்தை ஜே.சி.பி இயந்திரம் மூலமாக 4 அடி பள்ளம் வரை தோண்டினார்கள். தோண்டியவுடன் அழுகிய எலும்பு தெரிந்தது. அதிகமாக வாசனை வந்ததால் சற்று தள்ளி நின்று பார்த்தேன். எலும்பு மட்டும் இருந்தது. சதை அழுகிய நிலையில் காணப்பட்டது.

3. நான் மேற்படி சடலத்தின்மீது பிரேத விசாரணை மேற்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் பிரேத விசாரணை அறிக்கை நான் கொடுத்ததுதான். அது **அ.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் பிரேத பரிசோதனைக்காக எடுக்கப்பட்ட சடலத்தின் பகுதிகளை கடமலைக்குண்டு காவலர் திரு.சுதாகர் என்பரிடம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1 முதல் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

4. போலீசார் விசாரணையில் கிராம நிர்வாக அலுவலருக்கும், கிராம உதவியாளருக்கும் தகவல் சொல்லி வரச்சொன்னேன் என்று கூறவில்லை என்றால் சரியல்ல. 02.30 மணிக்கு போலீசார் பார்ட்டியுடன் சென்று,

தோண்டினோம் என்று கூறவில்லை என்றால் சரியல்ல. எதிரி கிஷோர் என்பவர் அடையாளம் காட்டியதாக போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என்னை காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தப்போது, மதியம் 1 மணியளவில் கடமலைக்குண்டு காவல் ஆய்வாளர் அவர்கள் அடையாளம் காட்டிய இடத்தை ஜே.சி.பி. இயந்திரம் மூலம் தோண்டியதாக போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

5. பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.16 ஆய்வாளர் தயார் செய்தார் என்றால் சரிதான். அ.சா.ஆ.16– ல் உள்ள விபரங்கள் பற்றி என்னால் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. அ.சா.ஆ.16 காலம் 4–ல் இறந்தவரை எப்போது, முதன்முதலில் யாரால் பார்க்கப்பட்டது என்று பூர்த்தி செய்யப்படவில்லை என்றால் சரிதான். அ.சா.ஆ.16 காலம் 5–ல் எங்கு எப்போது, எங்கு, யாரால் கடைசியாக உயிரோடு பார்க்கப்பட்டது என்ற பூர்த்தி செய்யப்படாமல் உள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.16 காலம் 13–ல் எந்த ஆயுதம் பயன்படுத்தப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

6. அ.சா.ஆ.16 காலம் 17–ல் என்ன மாதிரியான எரிபொருள் வைத்து எரிக்கப்பட்டது என்றும், சாட்சி மற்றும் எதிரிகளின் பெயர்கள் குறித்த விபரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. பஞ்சாயத்தார்கள் 1 முதல் 5 வரையுள்ள நபர்கள் இராமநாதபுரத்தை சார்ந்தவர்கள் அல்ல என்றும், கடமலைக்குண்டு பகுதியை சேர்ந்தவர்கள் பஞ்சாயத்தார்களாக சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அறிக்கையில் எந்த குற்றப்பிரிவின்கீழ் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், வேண்டுகோள் கடிதத்தில் உள்ளது. நான் நிர்வாக நடுவர் என்ற முறையில் பூமியில் தோண்டி பிணத்தை எடுப்பதற்கு நிர்வாக விதிமுறைகள் உள்ளன என்றால் சரிதான்.

7. பூமியில் புதைக்கப்பட்ட சடலங்களை தோண்டி எடுத்து விசாரணை செய்வதற்கு மாவட்ட ஆட்சியர் அல்லது கோட்டாட்சியர் அவர்களிடம் அனுமதி பெற வேண்டும் என்றால் சரியல்ல, எனக்கு பிரேத விசாரணை செய்ய அதிகாரம் உண்டு. மாவட்ட ஆட்சியர் அல்லது கோட்டாட்சியர் அவர்களிடம் அனுமதியின்பேரில் தான் சடலங்களை ஆய்வு செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. உள்ளூர் பஞ்சாயத்தார்களின் கையொப்பங்களை பிரேத விசாரணை அறிக்கையில் கட்டாயம் பெறவேண்டும் என்றால் சரியல்ல. நான் அவ்வாறு அறிக்கையில் கையொப்பம் வாங்கவில்லை என்றால் சரிதான். தடய அறிவியல் நிபுணர்கள் சடலம் தோண்டப்பட்ட இடத்திற்கு வரவழைக்கப்பட்டு, ஆய்வு செய்தார்கள் என்றால் சரியல்ல, மருத்துவர்கள் வந்தார்கள்.

8. தோண்டி எடுக்கப்பட்ட பிரேதத்தை நான் ஆய்வு செய்தேன் என்றால் சரிதான். அ.சா.ஆ.16 ல் எலும்புகள் சேதம் அடைந்திருந்ததாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சம்பவ விசாரணை குறித்து மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அறிக்கை செய்தேன் என்றால் சரிதான், மாதம் இரு அறிக்கை அனுப்புவது வழக்கும். தோண்டி எடுத்த இடம் கிராம கணக்குப்படி யாருக்கு சொந்தமானது என்றால் சர்வேஷ்வரய்யா டிரஸ்டுக்கு சொந்தமான இடம், புல எண்.168 ஆகும். மேற்படி சர்வேஷ்வரய்யா டிரஸ்டுக்கு சொந்தமான இடம் என்பதால் அவர்களை அழைத்து அவர்கள் முன்னிலையில் விசாரணை செய்தேனா என்றால் தகவல் சொல்ல காலஅவகாசம் இல்லை.

9. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வேஷ்வரய்யா டிரஸ்டுக்கு சொந்தமான இடத்தில் பொதுமக்கள் பகல் நேரங்களில் அதிக நடமாட்டம் இருக்கும் என்றால் சரியல்ல. நான் கட்டாய விதிகளுக்கு உட்பட்டு சடலத்தை தோண்டி எடுக்கவில்லை என்றாலும், காவல்துறையின் நிர்பந்தத்தின் அடிப்படையில் உண்மைக்கு மாறாக சாட்சியம்

அளிக்கிறேன் என்றாலும், ஆவணங்கள் சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் தயாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

<u>**நீதிமன்ற கேள்வி**</u>

யாருடைய சடலம் தோண்டி எடுக்கப்பட்டது என்றால் செல்லப்பாண்டி என்பவரின் சடலமாகும்.

<u>**1 முதல் 9 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**</u>

செல்லப்பாண்டி என்பவரின் உடல் என்று காவல்துறையினர் சொன்னதின் அடிப்படையில் நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. செல்லப்பாண்டி என்ற பெயர் காவல்துறையினர் சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

<u>**மறு விசாரணை**</u> :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 11.08.2026 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.08.11 20:39:25 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
11.08.2026